2018 ஜூன் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

237—

ஆரம்ப சுகாதார நிலையம்

***8645—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, மதுரை மேற்கு ஒன்றியம், சிறுவாலை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி, மதுரை மேற்கு ஒன்றியம், சிறுவாலை கிராமத்தில் உரிய விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தால், தற்போது அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.*

திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென வாழாமல், தமிழக மக்களுக்காகவே வாழ்ந்த எங்கள் குடும்ப குலதெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்திட்ட மக்கள் நலத் திட்டங்களில் எள் முனையளவும் குறைபடாமல், அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்*

அவர்களையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும், இந்த நல்ல வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–40

தென்பாண்டி மண்டலம், அன்னை மீனாட்சி குடிகொண்டிருக்கும் மீனாட்சிப்பட்டணம் மதுரை, தோப்பூரில், தென் தமிழகத்தில் உள்ள 12 மாவட்டங்கள் மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தத் தமிழகமும், அண்டை மாநிலமான கேரளாவும் பயன்பெறுகின்ற வகையிலே, தலைநகர் டெல்லியில் உலகத்தரம் வாய்ந்த மருத்துவச் சேவைகளை வழங்கக்கூடிய மிகச் சிறந்த AIIMS மருத்துவமனைக்கு இணையான மருத்துவமனையை தாயுள்ளத்தோடு பெற்றுத்தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஏனைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எனது சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பில் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிள்ளைக்கு என்ன தேவை என்பது அவனைப் பெற்ற தாய்க்குத்தான் தெரியும். அதைப்போல, ஒரு விவசாயிக்கு என்ன தேவை என்பது ஒரு விவசாயிக்குத்தான் தெரியும். அந்த அடிப்படையிலே, இன்றையதினம் தமிழ்நாட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், விவசாயிகளின் தேவைகளை அறிந்து, இரண்டுபோக சாகுபடியில், முதல்போக சாகுபடிக்காக, ஜூலை 4 ஆம் தேதிக்குமேல் திறக்கப்பட வேண்டிய தண்ணீரை, ஜூன் 28 ஆம் தேதியே திறந்துவிட்டு, தமிழகத்தில் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியில் உள்ள இருபோக

2018 ஜூன் 28]

சாகுபடி செய்கின்ற விவசாய மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் உங்கள் உரையை முடித்துவிட்டீர்களா, இல்லையா?*

திரு. கி. மாணிக்கம்: *இன்னும் என் கேள்வியை முடிக்கவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மேற்கு ஒன்றியம், மதுரை மாவட்டம், சிறுவாலை கிராமம் என்பது ஓர் அழகிய விவசாய கிராமம். இங்கு அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. இந்தக் கிராமத்தைச் சுற்றி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம், இரண்டாவது கேள்வி கேட்கிறீர்களா அல்லது முதல் கேள்விதானா? முதல் கேள்வியையே இன்னும் முடிக்கமாட்டேன் என்கிறீர்களே! கேள்வியை முடியுங்கள்.*

திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. இந்தக் கிராமத்தைச் சுற்றி சுமார் 30–க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் இங்கு வசித்து வருகின்றார்கள். டெல்டா மாவட்டத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் விவசாயம் செய்யக்கூடிய பகுதி இந்தப் பகுதி. இந்த கிராமத்தைச் சுற்றி, சுமார் 15 கி.மீ. சுற்றளவில் எந்த அரசு மருத்துவமனையும் கிடையாது. எனவே, விவசாயப் பெருங்குடி மக்களின் பாதுகாவலராக விளங்கி, அம்மா அவர்களின் அரசை வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோரின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, இதனை நிறைவேற்றிட ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2018 ஜூன் 28

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், சுகாதாரத் துறை சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறார். இந்த ஆண்டு வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் சோழவந்தான் மருத்துவமனை மேம்படுத்தப்படும் என்ற நல்ல அறிவிப்பும் இடம் பெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே பாலகிருஷ்ணாபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அது அரசினுடைய மிக சாதகமான, கனிவான பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. தங்களுக்கு நல்ல செய்தி வரும். இப்பொழுது கேட்டுள்ள கோரிக்கை தொடர்பாக வருங்காலத்தில் அரசு உரிய ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம், என்ன மறுபடியும் கேள்வி கேட்க வேண்டுமா? ஏற்கெனவே 3 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.* (குறுக்கீடு) *சரி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையிலே ஒரு யுகப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், பாலகிருஷ்ணாபுரத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என்ற நல்ல இனிப்பான செய்தியை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், அரசுக் கொறடா அவர்கள்.*

திரு. சு. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானும், மண்ணும், கடலும் மறைந்து மடிந்தாலும்கூட, மறைந்திடாத புகழுக்குரிய, தமிழக மக்களின் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவுகளைப் போற்றி*

வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்ட மருத்துவமனையின்கீழ், ஓர் அரசு தலைமை மருத்துவமனை, 2 தாலுகா அரசு மருத்துவமனைகள் மற்றும் தாலுகா அல்லாத அரசு மருத்துவமனை ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தைவிட அரியலூர் மாவட்டத்தில் சுமார் 2 இலட்சத்திற்கும் அதிகமாக மக்கள் உள்ளனர். பெரம்பலூர் மாவட்ட இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் மருத்துவத் துறையின் இணை இயக்குநர் நல அலுவலகத்தைப் பிரித்து, அரியலூர் மாவட்டத்திற்குத் தனியாக ஓர் இணை இயக்குநர் நல அலுவலகம் அமைத்திட, மாண்புமிகு அம்மாவின் நல்லரசு ஆவன செய்து, விரைந்து உதவிட முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கான நல்ல சேவைக்காகவும், நிருவாக வசதிக்காகவும், மாண்புமிகு அரசு தலைமை கொறடா அவர்கள் கேட்டிருக்கக்கூடிய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலனை செய்து, துறைரீதியாக உரிய கருத்துருக்களைப் பெற்று, விரைவில் ஆவன செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அண்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் தொழுதூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைந்துள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையம் 1990 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, சற்றேறக்குறைய 28 ஆண்டுகள் ஆகின்றன. பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா

அவர்கள்கூட 'தொழுதூர் வந்தேன்; பொழுது புலர்ந்தது' என்று சொன்ன வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தக் கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி, அவசர விபத்து சிகிச்சைப் பிரிவுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக உருவாக்கித் தர அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும், ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்தப்பட்டு செயலாற்றிக் கொண்டிருக்கின்றது. தாங்கள் குறிப்பிடும் தொழுதூர் போன்ற பகுதிகளில் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும், எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய நெடுஞ்சாலைகளில் (National Highways), மாநில நெடுஞ்சாலைப் பகுதிகளில் இருக்கின்றன என்பதைத் தனியாக ஆய்வு செய்து, அவற்றையெல்லாம் விபத்து காய சிகிச்சை மையங்களோடு கூடியதாக மாற்றுவதற்கு உரிய கருத்துருவைப் பெற துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில், தாங்கள் குறிப்பிடும் தொழுதூர் பகுதியையும் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

238—

சிற்றுந்து வசதி

***888—திரு. பெரியண்ணன் அரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—